இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 22-06-2024

# இன்று 'நெட்' - நாளை 'நீட்'

ஒன்பது இலட்சம் மாணவர்கள் எழுதிய 'நெட்' தேர்வை ரத்து செய்துள்ளது ஒன்றிய அரசு. ஒரு தேர்வைக் கூட ஒழுங்காக நடத்தத் துப்பு இல்லை என்பது இதன்மூலம் மெய்ப்பிக்கப்பட்டு இருக்கிறது.

பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பணியிடத்துக்குத் தகுதி பெறுவதற்கும், இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை பெறுவதற்கும் தேசிய தேர்வு முகமையால் 'நெட்' தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டுக்கான இந்தத் தேர்வு கடந்த 18 ஆம் தேதி இந்தியா முழுவதும் நடத்தப்பட்டது. 317 நகரங்களில் 1,205 மையங்களில் இந்த தேர்வு நடத்தப்பட்டது. இதில் 9 இலட்சத்து 8 ஆயிரத்து 580 பேர் தேர்வு எழுதினார்கள். இந்தத் தேர்வை ரத்து செய்துள்ளது ஒன்றிய அரசு.

"தேசிய இணைய குற்ற அச்சுறுத்தல் ஆய்வுப் பிரிவு அளித்த தகவல்களின் அடிப்படையில், 'நெட்' தேர்வில் முறைகேடு நடந்திருக்க வாய்ப்பிருப்பது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. எனவே, ஜூன் 18ஆம் தேதி நடத்தப்பட்ட 'நெட்' தேர்வு ரத்து செய்யப்படுகிறது. இத்தேர்வு புதிதாக மீண்டும் நடத்தப்படும்" என்று யு.ஜி.சி. அறிவித்துள்ளது.

**"நெட் தேர்வுக்கான வினாத்தாள் 'டெலிகிராம்' சமூக ஊடகத்தில் கசிந்துள்ளது. இதனால்தான் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது" என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூச்சமில்லாமல் சொல்லி இருக்கிறார். 'நெட்' தேர்வுக்கான வினாத்தாள் கசிந்ததற்குப் பொறுப்பேற்க வேண்டிய அமைச்சர் அவர்தான். 'டெலிகிராமில் கசிந்துவிட்டது' என்று கூச்சமில்லாமல் சொல்கிறார். ஒருமுறை கசிவதற்கு வாய்ப்பு கிடைத்தால், அடுத்த முறையும் கசியும். அப்போதும் தேர்வுகளை ரத்து செய்துகொண்டே இருப்பாரா? முறைகேடு குற்றச்சாட்டுகள் இல்லாத தேர்வுகளையே இவர்களால் ஏன் நடத்த முடியவில்லை?**

"தேசியத் தேர்வுகள் நடத்துவதில், தேசியத் தேர்வு முகமை மற்றும் ஒன்றியக் கல்வித் துறை அமைச்சகத்தின் அலட்சியம் கடும் கண்டனத்துக்குரியது. இதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் பதவி விலக வேண்டும்" என்று இந்திய மாணவர் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது. இதுபோன்ற தார்மிகப் பொறுப்பு நடவடிக்கைகளை பா.ஜ.க. ஆட்களிடம் எதிர்பார்க்க முடியாது.

இதைவிடக் கேவலமான முறைகேடுகள் நடந்த தேர்வு, 'நீட்' தேர்வு ஆகும். "கடந்த மே 4 ஆம் தேதி இரவு அமித் ஆனந்த் மற்றும் நிதிஷ்குமார் என்பவர்களிடம் இருந்து எனது மாமா நீட் தேர்வு வினாத்தாள் மற்றும் விடைத்தாள் வாங்கிக் கொடுத்தார். அன்று இரவே வினாத்தாள்களில் உள்ள கேள்விகளைப் படித்து மனப்பாடம் செய்து தேர்வு எழுதினேன்" என்று ஒரு மாணவர் பீகார் மாநில காவல் துறையில் வாக்குமூலம் கொடுத்துள்ளார். வாக்குமூலம் அல்ல இது, ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். இந்த மாணவர் பெயர் அனுராக். பீகார் மாநிலம் சமஸ்திபூரைச் சேர்ந்தவர். தேர்வுத் தாள் முன்கூட்டியே வெளியானது தொடர்பாக பீகார் மாநில காவல் துறை விசாரணை நடத்தி வருகிறது. அதில் வெளியான ரகசியம் இது. இப்படி அனுராக் போல எத்தனை பேருக்கு அந்த வினாத்தாள் முன்கூட்டியே கிடைத்ததோ தெரியவில்லை.

**நாடு முழுவதும் 24 இலட்சம் மாணவர்கள் 'நீட்' தேர்வு எழுதி இருக்கிறார்கள். குஜராத், பீகார், இராஜஸ்தான், அரியானா ஆகிய மாநிலங்களில்தான் வினாத்தாள் கசிவுச் செய்தி வெளியாகி இருக்கிறது. ஆள் மாறாட்டம் புகார்கள் வந்துள்ளன. முறைகேடு செய்பவர்கள் இந்த மாநிலங்களையே தேர்வு செய்கிறார்கள். வினாத்தாளை முன்கூட்டியே வெளியிட்டதாக பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.**

**குஜராத் மாநிலத்தில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தேர்வு அறையில் இருக்கும் மாணவர்களுக்கு விடை சொல்லித் தரும் வேலையை தேர்வுக் கண்காணிப்பில் இருக்கும் ஆசிரியர்களே பார்த்துள்ளார்கள். 27 மாணவர்களிடம் இருந்து இந்த ஆசிரியர்கள் முன்கூட்டியே பணம் வாங்கி இருக்கிறார்கள். 2.3 கோடி ரூபாய் இந்த ஆசிரியர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.**

அரியானா மாநிலத்தில் ஒரே தேர்வு மையத்தில் அடுத்தடுத்த வரிசை எண்ணில் அமர்ந்து தேர்வு எழுதிய ஆறு மாணவர்கள் ஒரே மதிப்பெண் எடுத்தார்கள். வினாத்தாள் கசிந்ததாகப் புகார் வந்த ராஜஸ்தான் தேர்வு மையத்தில் 11 மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளார்கள். நெகட்டிவ் மார்க் என்ற அடிப்படையில் சாத்தியமில்லாத மதிப்பெண்கள், விருப்பத்துக்கு ஏற்ப இவர்களுக்குப் போடப்பட்டுள்ளது. தேர்வுக்குத் தாமதமாக வந்ததாக போனஸ் மதிப்பெண் என்ற பெயரால் 80 முதல் 90 மதிப்பெண் வரை பலருக்கும் போடப்பட்டுள்ளது. 1,563 பேருக்கு கருணை மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளது. மோசடியின் புதிய வடிவம் இது. மாட்டிக் கொண்டதும், 'கருணை மதிப்பெண்ணை ரத்து செய்து விட்டோம்' என்று பல்டி அடித்துவிட்டது பா.ஜ.க. அரசு.

**இதற்கு என்ன காரணம்? ராகுல் காந்தி மிகச் சரியான காரணம் ஒன்றைச் சொல்லி இருக்கிறார். "நீட் தேர்விலும், நெட் தேர்விலும் முறைகேடு நடப்பதற்கு முதன்மைக் காரணம், கல்வி நிலையங்கள் கையகப்படுத்தப்பட்டதே ஆகும். பல்கலைக் கழகங்களில் நியமிக்கப்படும் துணைவேந்தர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவது இல்லை. குறிப்பிட்ட (ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.) அமைப்பைச் சேர்ந்தவர்களா என்று பார்த்துத் தான் தேர்வு செய்யப்படுகிறார்கள். இதனால் கல்வி அமைப்பே சீர்கெட்டுள்ளது" என்று சொல்லி இருக்கிறார் ராகுல் காந்தி.**

'நெட்' தேர்வு ரத்து செய்யப்பட்டதைப் போல, 'நீட்' தேர்வை ரத்து செய்வதற்கும் ஆயிரம் காரணங்கள் அதிகமாக இருக்கின்றன. 'நீட்' தேர்வை ரத்து செய்வதற்கும், நிரந்தரமாக விலக்கிக் கொள்வதற்கும் ஆதரவாக இந்தியா முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன. அரசியல் கட்சிகளைத் தாண்டி மாணவர்கள் கையில் இப்போராட்டம் போய்ச் சேர்ந்துள்ளது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2024) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் 2024–2025 ஆம் ஆண்டிற்கான நீர்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்தீப் சக்சேனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி 2024–2025 ஆம் ஆண்டிற்கான வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2024) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் 2024–2025 ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### திட்டமிட்டு ஒரு நாடகத்தை நடத்திவிட்டு விதிகளுக்குப் புறம்பாக நடந்துள்ளனர் – என்றாலும்

### அ.தி.மு.க. உறுப்பினர்களை மீண்டும்

# அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும்!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூன் 22-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அ.தி.மு.க. உறுப்பினர்களை மீண்டும் அவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்குமாறு கோரி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். டிசம்பர் 2001ல் இதுபோன்று ஒரு நிகழ்வு கடலூர் மாவட்டம், பண்ருட்டி பகுதியில் நடைபெற்று, 52 நபர்கள் மரணமுற்று, 200க்கும் மேற்பட்டோர் மிகுந்த பாதிப்புக்குள்ளானார்கள். அப்போது உரிய நடவடிக்கை சரிவர எடுக்கப்படவில்லை என்று எல்லோரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே. மணி அவர்களும், நம்முடைய தி.வேல்முருகன் அவர்களும் அவையிலேயே இதுகுறித்து மார்ச் 2002 ஆம் ஆண்டு உரையாற்றியிருக்கிறார்கள்.

**மரபுகளுக்கு மாறாக குழப்பம்!**

தற்போது இந்தச் சம்பவம் குறித்து என்னுடைய கவனத்திற்கு வந்தவுடனேயே நான் தீவிர நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளேன். அதுகுறித்து நான் அனைத்து உறுப்பினர்களும் பேசிய பின்னர் விரிவாகப் பதில் வழங்குகிறேன். அப்போது சரிவர நடவடிக்கை எடுக்கப்படவில்லை; தற்போது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள காரணத்தால், இப்போது பேசுகிற உறுப்பினர்கள் அந்த நிகழ்வு குறித்து பேசுவார்களோ என பயந்துதான் இவர்கள் இன்றைக்குத் திட்டமிட்டு ஒரு நாடகத்தை அரங்கேற்றிவிட்டு, விதிகளுக்குப் புறம்பாக நடந்துகொண்டு, மரபுகளுக்கு மாறாக குழப்பம் விளைவிக்க முயன்று வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

ஜனநாயக முறையில் இந்த மாமன்றம் நடைபெறவேண்டும் என்பதில், தலைவர் கலைஞர் அவர்களும், நானும் அசையாத கொள்கை உறுதி கொண்டவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திலே பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும் என்பதில் கொள்கை உறுதி கொண்டவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி)

தாங்களும் பல கோரிக்கைகள் வைத்து, பேரவை முன்னவர் அவர்களும் பேசுவதற்கு வாய்ப்பு தரலாம் என பரிந்துரை செய்தும் முதலமைச்சராக, அமைச்சர்களாக இருந்தவர்கள் இங்கே நடந்து கொண்ட முறை தவிர்த்திருக்கப்பட வேண்டியதுதான்.

**என்னுடைய வேண்டுகோள்!**

பேரவை விதி 120ன்கீழ் பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளீர்கள். அதில் நான் கருத்து சொல்ல விரும்பவில்லை. எனினும் என்னுடைய வேண்டுகோளாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குக் காலையிலும், மாலையிலும் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற உள்ள நிலையில், வெளியேற்றப்பட்டவர்கள் இந்த அவைக்கு வினாக்கள் விடைகள் நேரம் முடிந்த பின்னரே அனுமதிக்கப் பெறலாம் என்னும் வேண்டுகோளையும், பிரதான எதிர்க்கட்சி தன்னுடைய கருத்தினைப் பதிவு செய்ய வாய்ப்பு தர வேண்டும் என்றும், இதனை தாங்கள் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டு அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.6.2024) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் 2024–2025 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### காத்திருப்போர் பட்டியலுக்கு

# மதுவிலக்கு ஏ.டி.ஜி.பி. அதிரடி மாற்றம்!

## அரசு நடவடிக்கை!

*சென்னை, ஜூன் 22 -*

*கள்ளக்குறிச்சி சம்பவத்தை யடுத்து காத்திருப்போர் பட்டியலுக்கு மதுவிலக்கு ஏ.டி.ஜி.பி.யை அதிரடி மாற்றம் செய்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.*

*தமிழ்நாட்டில் ஐ.பி.எஸ். அதிகாரிகள் 4 பேரை பணியிடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.*

*மதுவிலக்கு மற்றும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு ஏ.டி.ஜி.பி. மகேஷ் குமார் அகர்வால், மதுவிலக்கு வடக்கு மண்டல எஸ்.பி. செந்தில்குமார் காத்திருப்போர் பட்டியலுக்கு அதிரடியாக மாற்றம்.*

*சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி. அருண், மதுவிலக்குப் பிரிவை கூடுதலாக கவனிப்பார். கீழ்ப்பாக்கம் துணை கமிஷனர் கோபி, மதுவிலக்கு வடக்கு மண்டல எஸ்.பி.யாக மாற்றம்.*